**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் – கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் உண்டி மற்றும் உறையுள் கட்டணம் ரூ.400/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) த்துறை

அரசாணை (நிலை) எண். 93

நாள் 20.12.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, மார்கழி 5

படிக்கப்பட்டது :–

1. அரசு ஆணை (நிலை) எண்.86 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(சிந2)துறை, நாள்.15.10.2013.
2. 2021–2022 ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால், சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட மானிய கோரிக்கையில் புதிய அறிவிப்பு எண்.8, நாள் 08.09.2021.
3. இயக்குநர் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, அவர்களது ந.க.எண்.டி1/5643/2021, நாள் 16.09.2021.

*****

**ஆணை:–**

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் "விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு உண்டி மற்றும் உறையுள் கட்டணத்தை எவ்வித பாகுபாடின்றி வழங்கும் பொருட்டு, கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணமாக தற்போது பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 175 ரூபாய் தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு 350 ரூபாய், ஐடிஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு 225 ரூபாய் என்று வழங்கப்படுவதை, அனைவருக்கும் 400 ரூபாயாக உயர்த்தி 9 கோடி ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும்".

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடிதத்தில் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ / மாணவியருக்கு 2013-14ம் ஆண்டு முதல் தற்போது வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள உண்டி (உணவு) மற்றும் உறையுள் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்:

| வ. எண் | விவரம் | உண்டி / உறையுள் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) (ரூ.) |
|---|---|---|
| 1. | தொழிற்கல்வி | 350 |
| 2. | பட்டயப்படிப்பு | 225 |
| 3. | பட்ட மேற்படிப்பு | 225 |
| 4. | பட்டப்படிப்பு | 175 |

3. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணமாக ரூ.400/- உயர்த்தி வழங்கும்பட்சத்தில் தோராயமாக கூடுதலாக ரூ.9.00 கோடி செலவில் 95,000 மாணவ/மாணவியர் பயனடைவார்கள் என பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. எனவே, கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணங்களை (Boarding and Lodging Charges) ரூ.400/-ஆக உயர்த்தி வழங்க உரிய ஆணை வழங்குமாறு அரசினை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்று கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணத்தை (Board and Lodging Charges) பின்வருமாறு உயர்த்தி நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| விவரம் | தற்போது வழங்கப்படும் உண்டி / உறையுள் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) (ரூ.) | உயர்த்தி வழங்கப்படும் உண்டி /உறையுள் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) (ரூ.) |
|---|---|---|
| தொழிற்கல்வி | 350 | 400 |
| பட்ட மேற்படிப்பு | 225 | 400 |
| பட்டயப்படிப்பு | 225 | 400 |
| பட்டப்படிப்பு | 175 | 400 |

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.57078/ நிதி(பி., மி.பி.)/2021, நாள் 17.12.2021 பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,
சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல
ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1),
சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2),
சென்னை–18. (பெயரில்).
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர்
அவர்களின் நேர்முக எழுத்தர், சென்னை –9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(பிந3)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

20/12/2021
பிரிவு அலுவலர்.

20/12/2021